**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 56/2024 | பி.வா.சா. | : 2 |
| பெயர் | : வெள்ளைத்துரை | த/பெ. | : சின்னவெள்ளை |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நடுவனூர் |
| தேதி | : 02.03.2026 | வயது | : 70/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் மற்றும் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரில் அரசாங்கம் கொடுத்த இலவச பட்டா தான் உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதிக்கு அரசு தரப்பில் இலவச பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. பிரதிவாதி பெயரில் பட்டா எதுவும் உள்ளதா என்றால் தெரியாது. பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா இடத்தை அல்லாபிச்சை என்பவருக்கு விற்பனை செய்ததாக சாட்சியம் அளித்துள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் சகோதரர் கனி ராவுத்தர் என்பவருக்கு தனி பட்டா உள்ளது என்றால் தெரியாது. வாதி மதுரையில் எந்த இடத்தில் உள்ளார் என்றால் தெரியாது. வாதி நடுவனூர் கிராமத்தின் ஜமாத் தலைவராக உள்ளார் என்றால் சரிதான். கிராம மக்களின் நல்லது கெட்டது அனைத்திலும் கலந்து கொள்வார் என்றால் தெரியாது.

3) நான் 2012ல் நடுவனூர் கிராம முஸ்லிம் ஜமாத் தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். ஜமாத்தில் என் மீது ஊழல் குற்றச்சாட்டு சொல்லி என்னை ஜமாத்திலிருந்து நீக்க தீர்மானம் இயற்றப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். தற்பொழுது சாட்சி அந்த கையெழுத்தை தான் போடவில்லை என்றும், யார் வேண்டுமானாலும் என்னுடைய கையெழுத்தை

போடமுடியும் என்றும் தெரிவித்தார். சாட்சியிடம் நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பத்தை காட்டி யார் கையொப்பம் செய்தார் என்று கேட்டதற்கு தெரியவில்லை என்று மறுத்து சொல்கிறார். 03.08.2015ம் தேதி இந்த வழக்கில் வாதியும், தற்பொழுது ஜமாத் தலைவருமான எங்கள் ஊரைச் சேர்ந்த சேக் மைதீன், அல்லா பிச்சை, பூச்செண்டு, சேக் முகமது ஆகியோர்கள் பள்ளிவாசல் செல்லும் பாதையை நான் ஆக்கிரமிப்பு செய்ததாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. மேற்படி நபர்கள் 11.08.2015ம் தேதி பள்ளிவாசல் செல்லும் பாதையை நான் ஆக்கிரமிப்பு செய்ததாக ஆவிச்சிபட்டி ஊராட்சிமன்றத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை.

4) 20.10.2012ம் தேதி என்னை ஜமாத் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கியபிறகு ஜமாத்திலுள்ள நிக்கா பதிவேடு, ஜமாத்தின் வரவு செலவு பதிவேடுகளை எடுத்து சென்றுவிட்டதாக வாதியும், எங்கள் ஊரைச் சேர்ந்த ஷாஜகான் என்பவரும் நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து புகார் மனு ரசீது எண். 599/2012 வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் முன்னிலையில் ஒப்படைத்ததாக தற்போது சாட்சி சொல்கிறார். ஜமாத்திலுள்ள நிக்கா பதிவேடு, ஜமாத்தின் வரவு செலவு பதிவேடுகளை கொடுக்கச் சொல்லி பலமுறை வாதி கேட்டதால் அவர் மீது கோபம் கொண்டு தற்போது அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு எங்கள் ஊரில் அரசு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி அவருடைய வீடு என்பதற்கான வீட்டுவரி ரசீதோ, பட்டாவோ என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை.

எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். வாதி ஜமாத் தலைவர் மீது பழைய பகையை வைத்துக்கொண்டு பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 02.03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.03.02 13:57:04 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.